/மின்னஞ்சல் மூலமாக/

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6
ந.க.எண்.048332/டபிள்யு2/இ3/2019 நாள். . 02.2021

பொருள் பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்வி – அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 01.08.2019 நிலவரப்படி மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் – ஆசிரியரின்றி உபரி பணியிடம் பொதுத்தொகுப்பிற்கு ஈர்த்துக்கொள்ளப்பட்டது – சார்பு.

பார்வை
1. அரசாணை எண்.525 பள்ளிக்கல்வித்துறை (டி1) நாள்.29.12.1997 மற்றும் 14.05.2004
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள். ந.க.எண்.48332/டபிள்யு2/இ3/2019, நாள்.10.10.2019 மற்றும் 11.10.2019
3. சென்னை மாவட்டம், பெற்றோர் ஆசிரியர் கழக கூட்ட அரங்கில் 22.10.2019 முதல் 25.10.2019 வரை நடைபெற்ற பணியாளர் நிர்ணய ஆய்வுக்கூட்டம்
4. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட 01.08.2019 நிலவரப்படியான முதுகலைப்பாட ஆசிரியர் சார்பான பணியாளர் நிர்ணய அறிக்கை
5. பள்ளிக்கல்வி இயக்கக 09.12.2020 நாளிட்ட தொலைபேசி தகவலின்படி முதன்மைக்கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதங்கள்

------

தமிழ்நாட்டிலுள்ள அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 01.08.2019 நிலவரப்படி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதுகலை ஆசிரியர்கள் நிர்ணயம் செய்யப்பட்டது சார்ந்து பார்வை(3)ன்படி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கூட்டம் மற்றும் பார்வை(5)ல் முதன்மைக்கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதங்களின்படி 90 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் ஆசிரியரின்றி உபரியாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அவ்வாறு கண்டறியப்பட்ட ஆசிரியரின்றி உபரியாக உள்ள 90 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் சார்ந்த மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களால் படிவம் 2Bல் இயக்குநரின் பொதுத்தொகுப்பிற்கு சரண் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்டவாறு ஆசிரியரின்றி உபரியாக கண்டறியப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் பொதுத்தொகுப்பிற்கு சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலரால் ஒப்படைக்கப்பட்ட 90 முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்களை இயக்குநரின் பொதுத்தொகுப்பிற்கு ஈர்த்துக் கொள்ளப்பட்டு இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநரால் ஈர்த்துக்கொள்ளப்பட்ட பட்டியலில் உள்ளவாறு 90 பணியிடங்களின் விவரத்தினை தொடர்புடைய பள்ளி அளவைப்பதிவேட்டில் (Scale Register) உடனடியாக உரிய பதிவுகள் (நீக்கம்) மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பள்ளித்தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மேற்கண்ட பணியிடங்கள் யாவும் பள்ளிக்கல்வி இயக்குநரால் ஈர்த்துக்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ள நிலையில் அப்பணியிடங்களை எதிர்காலத்தில் காலிப்பணியிடமாக பயன்படுத்த இயலாது எனவும் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இச்செயல்முறைகள் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அளித்திடுமாறு சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பட்டியல் (90 பணியிடங்கள்).

பள்ளிக்கல்வி இயக்குநர்

04.02.2021

பெறுநர்
சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
நகல்: சம்பந்தப்பட்ட பள்ளித்தலைமையாசிரியர்கள்